13.02.2026 OS.No.51/2020 DW2 Name :.பாண்டியன்

குறுக்கு விசாரணை

1. நான் தற்போது ஜாபராபாத் ரோட்டில் உள்ள வீட்டில்தான் இருக்கிறேன். எனக்கு எழுதபடிக்க தெரியும். மாரியம்மன் கோவில் தெருவில் வசிப்பதாக பிரமாண வாக்குமூலத்தில் தவறாக கூறியுள்ளேன் என்றால் பிரச்சனை காரணமாக தற்காலிகமாக நான் வெளியே வசிக்கிறேன். வழக்கு சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. பி சொத்து விவரம் நியாபகம் இல்லை. சி சொத்து விவரமும் நியாபகம் இல்லை.
2. வழக்கு விவரம் எதுவும் தெரியாமல் சேகர் என்னுடைய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரவிக்கு நான் பணம் கொடுக்கவேண்டும் என ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். பணத்தை திருப்பி கொடுக்கவில்லை. அது குறித்து நான் வழக்கு போட்டுள்ளேன். வழக்கு பற்றிய விவரத்தை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை. ரவியின் தகப்பனார் பெயர் குழந்தை என அழைப்பார்கள்.
3. ரவியின் தாயார் பெயர் தெரியாது. பிரமாண வாக்குமூலத்தில் அவரது பெயர் சரஸ்வதி என தவறாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. ரவி நகை போட்டுள்ளதாக பிரமாண வாக்குமூலத்தில் கூறியிருந்தால் அது தவறாகும். வழக்கு சொத்தில் ரவியும் அவரது குடும்பமும் தான் வசிக்கிறார்கள். வழக்கு சொத்தில் ரவி கடை கட்டி வியாபாரம்

செய்கிறார். சுமார் 25 ஆண்டுகளாக அந்த வீட்டில் உள்ளார் என்றால் அவரது தாயார் இறந்த பின்னர் அங்குதான் உள்ளார்.

4. அவர் இறப்பதற்கு முன்னரும் அந்த வீட்டில் தான் இருக்கிறார். ரவி குடியிருக்கும் வீட்டில் நான்கு அறைகள் ஒரு கடை கிணறு உள்ளது மற்ற விவரம் தெரியாது. ரவியின் குடும்பம் பற்றி உண்மை எதுவும் தெரியாமல் சேகருக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ரவியின் தாயார் பெயர் கிளியம்மாள் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 13/02/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.02.13 18:37:43 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.